

ஆச்சரிய மனிதர்!

# ஷிவ் நாடார் @ வள்ளல்!

ஷிவ் நாடார் - இந்தியாவின் டாப் 4 கம்ப்யூட்டர் நிறுவனங்களில் ஒன்றான HCL - ன் உரிமையாளர். 30,000 கோடி வருமானம் ஈட்டிய சக்சஸ் சக்ரவர்த்தி. இது பலர் அறிந்த முகம். அறியாத முகம் அவருடைய வள்ளல் தன்மை! அந்த முகத்தைக் கண்டறிய ஷிவ் - உடன் ஒரு சந்திப்பு...

**➡ ஆசியாவின் தலைசிறந்த 48 கொடைவள்ளல்கள் பட்டியலில் உங்கள் பெயரை அறிவித்திருக்கிறது ஃபோர்ப்ஸ் பத்திரிகை. வாரிவழங்கும் இந்த வள்ளல் குணம் உங்களுக்கு எப்படி வந்திருக்கும் என்று தோன்றுகிறது?**

"எனக்கு அப்போது பதினைந்து வயது. திருச்சி St. ஜோசப்-ல் படித்துக் கொண்டிருந்த காலகட்டம். நீதிபதியாக இருந்தார் தந்தை. சிக்கலில்லாமல் போய்க்கொண்டிருந்த எங்கள் வாழ்க்கையில் பேரிடியாக வந்து தாக்கியது அவரது மரணம். எட்டுக் குழந்தைகளில் நான் ஏழாவது. திக்கு முக்காடிவிட்டாள் தாய். வாழ்க்கையின் எல்லா கஷ்டங்களையும் நான் ஒரு சேர அனுபவித்தது அப்போதுதான். எப்படியோ பி.யு.ஸி. படிப்பை முடித்து கோயமுத்தூர் பி.எஸ்.ஜி. கல்லூரியில் சேர்ந்துவிட்டேன். ஹாஸ்டல் வாசம். வீட்டிற்கு நான் வரும்போதெல்லாம், அம்மா வேறு எதைச் செய்கிறாளோ இல்லையோ ஒரு விஷயத்தை தவறாமல் செய்வாள். என்னை அருகில் உள்ள காந்திமதி பள்ளிக்கு அழைத்துச் செல்வாள். பழைய துணிமணிகளை மூட்டையாகக் கட்டிக்கொண்டு வருவாள். அவற்றுடன் வருடம் முழுவதும் தான் சேர்த்த சிறிதளவு பணத்தையும் ஏழைக் குழந்தைகளுக்கு ஆசையோடு பரிசளிப்பாள். அதையும் என் கைகளில் கொடுத்து கொடுக்கச் சொல்லுவாள். புண்ணியம் என் கணக்கில் சேரவேண்டுமாம். தான் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் கொஞ்சமாவது தர்மம் செய்துவிட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த தாய்தான் இதற்கு காரணம் என்று தோன்றுகிறது."

**➡ நீங்கள் நடத்தும் சென்னை SSN கல்லூரிக்கு வருடந்தோறும் 4.6 கோடி ரூபாய் நன்கொடை அளிக்கிறீர்கள். இந்த கல்லூரி பிறந்த கதை...**

"HCL நிறுவனம் தொடங்கி 17 வருடங்கள் ஓடிவிட்டன. டெல்லியில் ஜாகை. மனைவி, குழந்தையுடன். பேத்தியைக் கொஞ்ச அடிக்கடி டெல்லி வருவாள் என் அம்மா. திடீரென்று ஒருநாள், "வீடு கட்டட்டும் என்று காத்திருந்தேன், கட்டிவிட்டாய்; தொழில் பெருகட்டும் என்று காத்திருந்தேன், அதுவோ அமோகமாய் நடக்கிறது; உன்னை உயர்த்திய சமூகத்திற்கு பிரதி உபகாரமாய் என்ன செய்வதாக உத்தேசம்?" என்றாள். "கண்டிப்பாக செய்யவேண்டும், ஆனால் அதற்கு இன்னும் நிறைய பணம் சேர்க்க வேண்டும்!" என்றேன். "அலை ஓய்ந்தபின் குளிக்கலாம் என்று கடற்கரையில் காத்துக் கொண்டிருந்தால் காத்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான். பணம் சேர்த்தவரை போதும், உடனே ஏதாவது செய்!" என்றாள். என்ன செய்வது என்று நான் குழம்ப, "நீ பி.எஸ். ஜி.யில் படித்திருக்கிறாய்; அதுபோல் ஒரு கல்லூரி கட்டலாம் அல்லவா?" என்று ஒரே போடாக போட்டாள். உடனே, வேலையிலிருந்து ஓய்வுபெற்று சென்னையில் வசித்துவந்த என் அண்ணனின் உதவியுடன் எங்கள் தந்தை திரு. சிவசுப்ரமணிய நாடார் பெயரில் கல்லூரியைத் தொடங்கிவிட்டேன்."



**➡ HCLஐ உங்கள் பெண் ரோஷிணியிடம் ஒப்படைத்துவிட்டு கல்விக்களத்தில் குதித்து விட்டீர்கள்...**

"ஒரு நிறுவனத்தின் வெற்றி அதனுடைய நிர்வாகத்தில் நாம் புகுத்தும் செயல்முறைகளைப்

பொறுத்தது. அவற்றை கச்சிதமாகப் புகுத்திவிட்டால் போதும், நேரடி மேற்பார்வை தேவையே இல்லை. HCL, SSN இரண்டையுமே நான் நேரடி மேற்பார்வை செய்வது கிடையாது. HCL-ஐ என் பெண் பார்த்துக் கொள்கிறாள். SSN-ஐ என் உயிர்த் தோழர் அம்பி ஸ்ரீநிவாஸனும் என் அண்ணன் மகள் கலா விஜய்குமாரும் பார்த்துக் கொள்கிறார்கள்.”

**➡ கிராமப்புறங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் முதலிடம் வகிக்கும் மாணவர்களை தத்து எடுத்துக்கொண்டு கல்வியை இலவசமாக அளிக்கும் திட்டம் பற்றி...**



கலா விஜய்குமார்

“Rural Scholarship Scheme என்று இதற்குப் பெயர். கிராமங்கள் நமது நாட்டின் உயிர்நாடி. அங்குள்ள மாணவர்களை, குறிப்பாக ஏழை, மாணவர்களை கைதூக்கிவிடுவது நமது கடமை அல்லவா?

வருடந்தோறும் 25 மாணவர்களை தத்து எடுத்துக் கொள்கிறோம். வறுமைக் கோட்டின் கீழே உள்ள குடும்பத்தில் பிறந்த இவர்களை அழைத்து வந்து உணவு, ஹாஸ்டல் வசதி இரண்டையும் கொடுத்து கல்வியும் அளிக்கிறோம்.

இப்படி தத்து எடுத்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு மாணவரும் ஒரு ஆசிரியரிடம் ஒப்படைக்கப்படுகிறார். 25 மாணவர்களுக்கு 25 ஆசிரியர்கள். 4 வருடங்களுக்கும் குறிப்பிட்ட ஆசிரியரே அந்த மாணவரின் வளர்ச்சிக்கு முழுப்பொறுப்பு. மற்ற மாணவர்களுக்கு நான்கு வருடப் படிப்பு என்றால் இவர்களுக்கு மட்டும் 4 வருடங்கள் மூன்று மாதங்கள். அது மட்டும் அல்ல, கல்லூரி தொடங்குவதற்கு 15 நாட்கள் முன்பே இந்த மாணவர்களை அழைத்துவந்து விடுவோம். புதிய சூழலில் அவர்கள் தங்களை பழக்கப்படுத்திக்கொள்வதற்காகவும் கூடுதல் ஆங்கிலப் பயிற்சிக்காகவும் இந்த ஏற்பாடு.”

**➡ நகர்ப்புறத்தில் வாழும் மாணவர்களோடு கலக்கும்போது, இவர்களுக்கு தாழ்வு மனப்பான்மை ஏற்பட வாய்ப்பில்லையா?**

“இயற்பியல், வேதியியல், கணக்கு மூன்று பாடங்களுக்கும் ஆசிரியரே இல்லாத ஒரு அரசுப் பள்ளியில் படித்து 1027 மதிப்பெண்கள் வாங்கிய மாணவன் நம்மிடம் வந்திருக்கிறான். ஏன் சொல்கிறேன் என்றால் இவர்கள் போராடத் தெரிந்தவர்கள். போராடுவதற்குத் தேவையான மனவலிமை பெற்றவர்கள். அந்த மனவலிமையைக் கொண்டே எப்பேர்பட்ட தாழ்வு மனப்பான்மையையும் தகர்க்கத் தெரிந்தவர்கள். IT-யிலும் CSE-யிலும் முதலிடம் வகிக்கும் மாணவர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் தத்து எடுத்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் என்றால் உங்களால் நம்பமுடிகிறதா?”

**➡ ஆசிரியர்களை ஊக்கப்படுத்துவதிலும் உங்கள் தாராள மனப்பான்மை வெளிப்படுகிறதே...**

“ஆமாம், அவர்களையும் HCL-ல் பங்குதாரர்களாக்கிவிட்டேன். படிப்பு முடிந்து கல்லூரியை விட்டு வெளியே செல்லும் மாணவர்களை ஆசிரியர்கள் பற்றி ஒரு மதிப்பீடு செய்யச் சொல்கிறோம். அவர்கள் தரும் மதிப்பீட்டின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு HCL பங்குகளை ஊக்கப்பரிசாக வழங்குகிறோம். இந்தியாவிலேயே SSN-ல் மட்டும்தான் இந்த முறை கையாளப்படுகிறது!”

**➡ சென்னையில் SSN. டெல்லியில் ஷிவ் நாடார் பல்கலைக்கழகம். உ.பி. மாநிலத்தில் ஏழை மாணவர்களுக்காக வித்தியாகியான் பள்ளிகள். இந்தியா முழுவதும் ஷிவ் நாடார் பள்ளிகள் அமைக்கும் திட்டம். இப்படி கல்விக்காக பாடுபடும் உங்களின் இலக்கு என்ன?**

“HCL போல் பணம் பண்ணுகிற விஷயம் என்றால் இலக்கை எளிதாக கூறிவிடலாம்- இந்த வருடம் இத்தனை கோடிகள் சம்பாதிப்பது என்று. ஆனால் இது சமூகத் தொண்டு. ஆகையால் ஒரு தொடர் பயணம். இலக்கு நிர்ணயிப்பது இயலாது.

ஆனால், சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்தபோது ‘அலும்னை’ என்று அழைக்கப்படும் முன்னாள் மாணவர் சங்கக் கூட்டங்கள் இரண்டில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. ஒன்று IIT- கரக்பூர், மற்றொன்று SSN. எப்படி IIT- கரக்பூரை



அம்பி ஸ்ரீநிவாசன்

பொறுத்தவரை ஐந்து மாணவர்களுக்கு ஒரு மாணவர் விகிதம் அமெரிக்காவில் வெற்றிகரமாக பணியாற்றுகிறார்களோ அதேபோல் SSN- யிலும் ஐந்து மாணவர்களுக்கு ஒரு மாணவர் விகிதம் அமெரிக்காவில் வெற்றி நடை போடுகிறார்கள் என்ற புள்ளி விவரம் கிடைத்தது. அதைக் கேட்ட உடன் வார்த்தைகளால் விவரிக்க இயலாத ஒரு மனநிறைவு ஏற்பட்டது உண்மை.”●

**- கிருஷ்ணா சிதம்பரம்**

**படங்கள்: ஆர்.சண்முகம்**